# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
**MCOP. No.145/2021**

சாட்சி -PW1

பெயர் -தியாகராஜன்

தந்தை பெயர் - P.சொக்கலிங்கம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.07.2026.**

**குறுக்கு விசாரணை (1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். விபத்து நான் நேரடியாக பார்க்கவில்லை எனக்கு சொல்லி தான் தெரியும். FIRல் ஆட்டோ இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. ஆட்டோ இடித்து விட்டு போனதால் எங்களால் கண்டுபிடிக்க முடியாததால் எதிர் மனுதாரராக அவரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து கொண்டு போனார்.

இருசக்கர வாகனத்திற்கு விபத்தின் போது காப்பீடு நிலுவையில் தான் இருந்தது என்றால் சரி. இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்ததால் 2 ஆவது எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. எது எவ்வாறாக இருப்பினும், காப்பீடு நிலுவையில் இருப்பதால் 2 ஆம் எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. இருவரும் தான் கொடுக்கவேண்டும்.

**குறுக்கு விசாரணை (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து நடந்த அன்று என் மகன் சென்ற இருசக்கர வாகனத்தில் எத்தனை நபர்கள் என்றால் இரண்டு நபர்கள் தான் சென்றார்கள். ராகுல் வண்டியை ஓட்டினார். பின்னால் என் மகன் சந்தோஷ் குமார் உட்கார்ந்து கொண்டு போனார். முதல் தகவல்

அறிக்கையில் நான் தாக்கல் செய்துள்ள விவரங்கள் சரிதான். ராகுல் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தில் எனது மகனும், பால்சனும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். வண்டியை ஓட்டிய ராகுல் மட்டும் தான் உயிருடன் இருக்கிறார். இது பற்றி எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக பாகாயம் காவல் நிலையத்தில் இருசக்கர வாகனத்தை இடித்த ஆட்டோவை கண்டுபிடிக்க இயலவில்லை என குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரி. இருசக்கர வாகன உரிமையாளர் தான் நஷ்டயீடு கொடுக்க வேண்டும் என்றும் பாலிசி விதிமுறைகளை மீறியதால் 2 ஆம் எதிர்மனுதாரர் நஷ்டயீடு கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the July 09th 2026.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.07.10 14:54:37 +0600

Additional District Judge(FTC),
Vellore.